සැලසීනෙ செலசீனெ SELACINE

SELACINE TELEVISION INSTITUTE

2019

வருடாந்த அறிக்கை

கௌர வெகுசன ஊடக அமைச்சர்
வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு 05.

கௌரவ அமைச்சர் அவர்களே,

ஆண்டறிக்கை - 2019

1971 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 14 (1) பிரிவுக்கமைய 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையை செலசினெ தொலைக்காட்சி நிறுவனம் சார்பாக என்னால் இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றது.

ஹரித் குணவர்தன
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்.

உள்ளடக்கம்

தூரநோக்கு, பணி, நோக்கம்	05
தலைவரின் மதிப்புரை	07
நிறுவனத்தின் தகவல்கள்	08
நிர்வாக கட்டமைப்பு 2019 மற்றும் தொடர்பு கொள்ளும் விபரங்கள்	09
ஆண்டறிக்கை - 2019	13
நிதியறிக்கைக்கான குறிப்புகள்	16
வருமான அறிக்கைகள்	18
ஐந்தொகை	19
காசுப்பாய்ச்சல் கூற்று	20
நிதியறிக்கைக்கான கூற்று	22
2019 ஆம் ஆண்டின் நிதி தொழிற்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளர்களின் கருத்துக்கள்	32

தூரநோக்கு, பணி, நோக்கம்

பணி

நிபுணத்துவத்துக்கு அப்பாற்பட்ட படைப்பாற்றல் மிக்க மனிதவள உதவியுடன் படைப்பாற்றல் மிக்க, திட்டமிட்ட மற்றும் உயர் மட்டத்திலான தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அரச நிறுவனங்களுக்காக கட்புல, செவிபுல தொடர்பாடல் மற்றும் வேறு படைப்பாற்றல் மிக்க பிரச்சார சேவைகளை வழங்குவதன் மூலம்

தூரநோக்கு

அரச இயந்திரத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு மற்றும் அனைத்து வியாபாரத்துறைகளினதும் வளர்ச்சியினை படைப்பாற்றலுடன் விளம்பரப்படுத்துவதன் மூலம் விளம்பரத்துறையின் முன்னோடியாதல்

நோக்கம்

நிதி நிலமையினை உயர்த்துதல்

சந்தை இலாபத்தினை உயர்த்துதல்

நிறுவன காலாசாரத்தினை உயர்த்துவதற்கான உபாயங்களை செயற்படுத்தல்

நிறுவன ஊழியர்கள் மற்றும் தலைவர்களை வளர்ச்சியுறச் செய்தல்



தலைவரின் மதிப்புரை

நான் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவராக 2021 டிசம்பர் 31 ஆம் திகதி நியமிக்கப்பட்ட பிறகு நிறுவனத்தால் வெளியிடப்படும் 2019 ஆண்டறிக்கையில் இந்தச் செய்தியை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த 37 ஆண்டுகளில் திரும்பிப் பார்க்கும்போது, விற்பனை, நிதி, நிர்வாகம், உற்பத்தி, நிகழ்வுகள் மற்றும் அதிவேக வடிவமைப்பு ஆகிய துறைகளில் செலசினே தனது திறன்களை கணிசமாக மேம்படுத்த முடிந்தது.

2019 ஆம் ஆண்டின் வருடாந்த வருமானமாக, செலசினே 634 மில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளதுடன், அந்த வருடத்தின் இலாபம் 8.3 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டின் வருமானம் 597 மில்லியன் ரூபாய் ஆவதுடன் ரூ.29.7 மில்லியன் இலாபத்தை ஈட்டவும் முடிந்தது.

வரைகலை பிரிவின் ஆக்கப்பூர்வமான விளம்பரங்கள், அதிக மதிப்புள்ள விளம்பரங்களை விளம்பரப்படுத்த லேக்ஹவுஸ் நிறுவனத்துடன் இணைந்து விளம்பர திட்டமிடலில் ஊடகப் பிரிவின் அதிக பங்களிப்பு ஆகியவற்றின் காரணமாக இந்த ஆண்டு திட்டமிடப்பட்ட வருமானம் உயர் மட்டத்தைக் காட்டியுள்ளது. அதன்படி, கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்தை இந்த ஆண்டு சாதகமாகக் குறிப்பது அதற்கான சிறந்த உதாரணமாகும். இந்தச் சூழலைத் தக்கவைக்க நிதித்துறை அர்ப்பணிப்புடன் செயற்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

இந்த வலுவான நிர்வாகத் திட்டத்தை விரைவாகப் பயன்படுத்தவும், இலாபம் ஈட்டும் வழிக்கு இந்த நிறுவனத்தை கொண்டு செல்வது அவசியமானதாகவும் இருந்தது. நான் செய்த முதல் பணி, குறுகிய காலத்தில் ஊழியர்களின் திறமையைக் கண்டறிந்து, அவர்களின் செயல்திறனை அதிகரிக்கச் சில நடவடிக்கைகளை எடுத்து முறையான முறைகளைப் பயன்படுத்துவதாகும்.

நாடு தற்போது எதிர்நோக்கி வரும் கோவிட் நிலைமையைக் கருத்தில் கொண்டு நிறுவனத்தின் பொருளாதாரப் பின்னணியைக் கட்டியெழுப்ப ஒரு நிறுவனமாக ஏற்கனவே ஒரு சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியான விடயமாகும். எமது எதிர்பார்ப்பு நிதி நன்மைகளை ஈட்டுவது மட்டுமன்றி அரசாங்கத்தின் ஊடகப் பொறிமுறையை மிகவும் பயனுள்ள நோக்கத்தில் பயன்படுத்துவதேயாகும்.



ஹரித் குணவர்தன
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்.

நிறுவனத் தகவல்கள்

பெயர்

செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

சட்டக்கட்டமைப்பு மற்றும் கடந்தகால நிலைமை

- 1982 பெப்ரவரி 01 ஆம் திகதி திட்டங்களை செயற்படுத்தும் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1982-1989 வரை காணி, நீர்ப்பாசன மற்றும் மகாவெலி அபிவிருத்தி அமைச்சின் கீழிருந்த அரச மரக்கூட்டுத்தாபனத்தின் மனித மற்றும் நிதி வளத்தின் கீழ் மகாவெலி உடனடி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக இலங்கை மக்களை தெளிவுபடுத்தும் பணியினை மேற்கொண்டது.
- 1989 ஜனசவிய நிகழ்ச்சித்திட்டத்தினை விளம்பரப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டது
- 1989.08.19 ஆம் திகதியுடைய 832/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் செலசினெ நிறுவனம் இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. (இது நிறுவனம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதல் சுவீகரித்தலாகும்).
- 1997.06.09 ஆம் திகதியுடைய 979/2 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தபால், தொலைத்தொடர்புகள் மற்றும் ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2001.12.20 ஆம் திகதியுடைய 1215/14 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2004.04.28 ஆம் திகதியுடைய 1338/9 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தகவல் மற்றும் ஊடக அமைச்சின் கீழுள்ள நிறுவனமாக பெயரிடப்பட்டது.
- 2005.12.08 ஆம் திகதியுடைய 1422/22 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது.
- 2007 07 ஆம் இலக்கமுடைய நிறுவன சட்டத்தின் உள்ளடக்கங்களுக்கு அமைவாக பூரண அரசுடைமையான பொதுநிறுவனமாக மாற்றுவதற்காக அமைச்சரவைக்கு 2008.03.26 ஆம் திகதி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

நிறுவனத்தின் பொறுப்புக்கள்

- அரசின் ஊடக விளம்பரப்படுத்தல் மற்றும் தயாரிப்பு நிறுவனமாக செயற்படுதல்
- 2005.05.16 ஆம் திகதி 1380/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கீழ் காட்டப்பட்டுள்ள பணிகள் நிறுவனத்தின் விடயப்பரப்பில் உள்ளடக்கப்பட்டது.
    - i. அச்சு/இலத்திரனியல் விளம்பர தயாரிப்பு
    - ii. அரசின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்தும் பிரச்சாரப்பணிகள்
    - iii. அரச பிரச்சார நிகழ்ச்சிகளை தயாரித்தல்
- 2008.12.02 ஆம் திகதியுடைய வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் கடிதம் சம்பந்தப்பட்ட பரீட்சிப்பின் பின்னர் 2008.12.24 ஆம் திகதியுடைய 08/2253/338/043 இலக்கமுடைய அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழுள்ள நிறுவனங்களின் அனைத்து விளம்பரங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகளை செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளவதை கட்டாயமாக்கும் அனுமதியை பெற்றுக்கொடுத்தது
- தொலைக்காட்சி ஆவண நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள் உட்பட தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்கள் போன்ற கட்புல செவிபுல தயாரிப்புக்களை மேற்கொள்ளுதல்
- பத்திரிகை விளம்பரத்தயாரிப்பு உட்பட விளம்பரங்னை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் ஒழுங்குபடுத்தல்.
- நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் அச்சு வேலைகள்.

நிர்வாகக் கட்டமைப்பு - 2019

சிரேஷ்ட முகாமைத்துவம்

டென்வர் ப்ரனாந்து	-	தலைவர் (வே.பா)	(2019.03.21 - 2019.04.30)
பிரபாத் சீ பெரேரா	-	தலைவர்	(2019.05.02 - 2019.12.12)
எச். எம். லக்ஷ்மன் டி சொய்சா	-	தலைவர்	(2019.12.13 - 2020.12.31)
எச். எம் மஞ்சுள ஹேரத்	-	பொது முகாமையாளர்	

நிர்வாகிகள்

எச்.எம்.யூ.பீ.சீ ஹேரத்	- முகாமையாளர்	(மனிதவளம் மற்றும் நிர்வாகம்)	(2018.10.15 - 2020.01.31)
திருமதி. புஷ்பா பமுனு ஆராச்சி	- முகாமையாளர்	(மனிதவளம் மற்றும் நிர்வாகம்)	(2019.07.03 - 2020.09.21)
சுனந்த வீரசிங்க	- முகாமையாளர்	(ஒலி / ஒளி தயாரிப்பு)	
அக்போ அமரசேகர	- பணிப்பாளர்	(வாடிக்கையாளர் சேவை)	
நலீன் அலஹகோன்	- முகாமையாளர்	(ஊடகப்பிரிவு)	
சாந்த லொகுகெட்டகொட	- முகாமையாளர்	(நிதி)	
சுஜித் புஷ்பகுமார	- முகாமையாளர்	(வரைகலைப்பிரிவு)	
அய்.எல்.பீ.பிரனாந்து	- முகாமையாளர்	(அதிவேக அச்சிடல்)	
இந்திக விஜேதுங்க	- முகாமையாளர்	(கொள்வனவு மற்றும் விநியோகித்தல்)	
பிரபாத் கஹாதுவ ஆராச்சி	- முகாமையாளர்	(நிகழ்ச்சிகள்)	

தணிக்கை

அரச கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்

வங்கியாளர்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

தொடர்பு விபரங்கள்

முகவரி - இல. 380/57, சரன வீதி, கொழும்பு 07

தொலைபேசி - 011-4320777, 011-4061586

தொலைநகல் - 011-2058229

மின்னஞ்சல் - selacine@gmail.com

இணையத்தளம் - www.selacine.lk

நிர்மான மற்றும் வரைக்கலை பிரிவு

நிர்மான மற்றும் வரைக்கலை பிரிவு விளம்பரத்துரையில் செயற்படும் எந்தவொரு நிறுவனத்திலும் மிகவும் முக்கியமானதொரு பிரிவாகக் கருதப்படுகின்றது. செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் அச்சு மற்றும் அனிமேஷன் வடிவமைப்பு செயற்பாடுகளிலும் முக்கிய பல செயற்பாடுகளை மேற்கொள்வது நிர்மான மற்றும் வரைக்கலை பிரிவினாலேயே ஆகும். அவற்றில் சுவர் விளம்பரங்கள், செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் விளம்பர பலகைகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை நாங்கள் உள்ளடக்குகிறோம். இத்துறையானது எப்போதும் புதிய படைப்புக்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் என மிகவும் வேகமாக முன்னோக்கிச் செல்லும் போட்டித்தன்மைமிக்க ஒரு துறையாகும். அதனால் எமது பிரிவைச்சேர்ந்தவர்களும் அது தொடர்பில் எப்போதும் விழிப்புணர்வுடன் செயற்படுபவர்களாகவே இருக்கின்றார்கள். எப்போதும் செயற்திறன் மிக்கதொரு பணியாளர்களுடன் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் வருடாந்த இலக்கை அடைய மற்றைய துணை பிரிவுகளுடன் இணைந்து எந்தவொரு கடினமான நிலையிலும் தமது இலக்கை நோக்கி பயணிக்க எத்தணிக்கும் ஒரு பிரிவாகவே அடையாளம் காணப்படுகின்றது. இப்பிரிவில் முன் அனுபவம் கொண்ட பல கலைஞர்களை கொண்ட இப்பிரிவு நிர்மானங்களுக்காக வெறும் வேலை நேரத்தில் மாத்திரம் வேலையை செய்யாமல் எந்நேரத்திலும் ஆயத்தமாக இருக்கும் ஒரு பிரிவாகும். அதனால் எமது நிறுவனத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு எமது பிரிவினால் பெறும் பங்கு வழங்கமுடிகின்றது. அதற்காக தமது சேவையை வழங்கும் ஊழியர் குழாம் எம்மிடம் உள்ளது.

உலகில் தொழிநுட்ப ரீதியில் நாளுக்கு நாள் முன்னோக்கிச் செல்லும் ஒரு துறை எனின் அது வரைக்கலை பிரிவு எனலாம். அந்த தொழில்நுட்ப மாற்றத்திற்கு ஏற்றது போல் போட்டித்தன்மையுடன் முன்னோக்கி செல்லவும் செலசினே நிறுவனத்தின் இலக்கை அடைய முடிவதும் அதனாலேயே என்று கூறலாம். அரச விளம்பரங்கள் பலவற்றின் நிர்மாண செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதும், அந்த பொறுப்பு எமது பிரிவிற்கு உண்டு. வருடத்திற்கு நிர்மானிக்கப்படும் வடிவமைப்புக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். கடந்த காலங்களில் அந்த சவால்களை வெற்றிகொண்டது மட்டுமல்லாமல் நிறுவனத்தின் நாமத்தை மேலேங்கச் செய்ய எம்மால் முடிந்தவித்தில் எமது சேவையை வழங்கியுள்ளோம்.

2019 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை வெளியாகும் இத்தருணத்தில் புதிய தலைவரின் தூரநோக்கு மற்றும் இலக்குகளை அடைய எமது சகோதர பிரிவுகளுடன் மிகவும் சிறந்த நட்புறவை பேணி சிறந்த சேவையை வழங்குவதே எமது முக்கிய நோக்காகும். கடந்த ஆண்டுகளிலும் பார்க்க அதிக செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக புதிய முகாமைத்துவத்தின் கீழ் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

ஊடகப்பிரிவு

ஊடகப்பிரிவின் முக்கிய மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களில் விளம்பரம் மற்றும் ஆடியோ காட்சி வடிவமைப்பு அட்டவணைகள் மற்றும் சமூக ஊடக விளம்பரங்களாகும். அது அனைத்து ஆண்டுகளிலும் அதிக இலாபத்தை கொண்டுவரும் ஒரு பிரிவாக இருப்பது அட்டவணையிடல் மூலமேயாகும். அதன் மூலம் 2019 ஆம் ஆண்டிலும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு முதலீடு ரூபா.375,524,279.55 ஆகும்.

2019 ஆம் ஆண்டு லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு அதிக விளம்பரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனால் எமக்கு சிறப்பு விலைக்கழிவுகளும் கிடைக்கப்பெறுகின்றது.

மேலும் தொலைக்காட்சி மற்றும் வானொலி அட்டவணைப்படத்தலின் படி எமக்கு சிறப்பு விலைக்கழிவுகள் கிடைக்கப்பெறுவதுடன் மேலும் சமூக ஊடக இணையத்தளங்களிலும் எமது ஊடக அட்டவணையிடல் மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி எமது ஊடகப்பிரிவில் சமூன ஊடகப்பிரிவு தனியாக செயற்பட்டு வருகின்றது. அங்கு எங்கள் புதிய படைப்புப் பணிகள் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

அதன்படி இலங்கை முதல்தர விளம்பர நிறுவனம் ஒன்று என்ற அடிப்படையில் எமது நிர்மான செயற்பாடகள் மட்டுமல்லாமல் விளம்பரத்திறனில் அதி உயரிய நிலையை செலசினே தொலைக்காட்சி நிறுவனம் தன்வசம் கொண்டுள்ளது.

விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவைப்பிரிவு

2019 ஆம் ஆண்டு ஒரு சவாலான ஆண்டாக இருந்ததுடன், அதனால் பிரிவுகளுக்கு புதிய ஆட்சேர்ப்புகளும் முன்னெடுக்கப்பட்டன.

முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது ஒட்டுமொத்தமாக நிகழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. வருமானம் மற்றும் ரூ. 634,368,092.16 மில்லியன் விற்பனை வருமானத்தை அடைய சாதகமாக பங்களித்தது.

மனிதவள மற்றும் நிர்வாகப்பிரிவு

எமது முக்கியமான மற்றும் உயரிய சொத்தாக அமைவது எமது மனிதவளமேயாகும். நிறுவனத்தின் வளர்ச்சிப்பாதையில் முன்னோக்கி செல்ல மற்றும் தமது இலக்குகளை அடைய மனிதவளத்தின் மூலம் சிறந்ததொரு ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள நிர்வாக பிரிவின் மூலம் 2019 ஆம் ஆண்டும் பெற்றுக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளே இவை.

- 37 வருட வரலாற்றுக்கு உரிமை கோரும் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் சட்டபூர்வமாக்கும் செயற்பாடுகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. மேலும் எதிர்காலத்தை பற்றி அதிகம் சிந்தித்து செயற்படுவதுடன் அதற்கு ஏற்றாற் போல் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.
- சிறந்த பயிற்சி வழங்கும் செயற்பாடுகள் மற்றும் சிறந்த தொழில்சார் செயற்பாடுகளை அதிகரிக்க கூடிய விதத்திலான சுற்றுச்சூழலை உருவாக்குவதன் மூலம் நிறுவனத்தின் ஊழியர்குழாத்தின் உத்வேகத்தை அதிகரித்தல், அவர்கள் கொண்டுள்ள திறமைகளை சரிவர கணித்து அவர்களின் நம்பிக்கையை அதிகரித்த அதன் மூலம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவர்களால் வழங்கக்கூடிய ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதுடன் அவர்களின் தனிப்பட்ட வளர்ச்சியையும் ஒப்போதும் ஒத்துழைப்பு வழங்கி மேம்படுத்தல்.
- நிறுவனத்தின் ஊழியர் நலத்திற்காக அதிக பிரதிலாபங்களுடன் கூடிய சுகாதார காப்புறுதி முறைகளை வழங்குதல், ஊழியர்களுக்கு கடன்களை பெற்றுக்கொடுத்தல், விழாக்கால சலுகைகள், சிறப்பு கொடுப்பனவுகள் என அவர்களின் வாழ்க்கை முறைமையில் வளர்ச்சியை அதிகரித்தல்.
- நிறுவனத்திற்கு சிறந்த மற்றும் உயரிய சேவையை பெற்றுக்கொடுக்க அவர்களுக்கு முறையான மற்றும் சிறந்த காரியாலய உபகரணங்களை வழங்கி செயற்பாடுகளை விரைவாக்கல்.

தயாரிப்பு பிரிவு

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் மற்றுமொரு முக்கியமான பிரிவாகத் திகழ்வது ஒலி,ஒளி தயாரிப்பு பிரிவாகும். கடந்த காலங்களில் இலங்கையில் தொலைக்காட்சி ஊடகத் துறையில் ஆவணப்படங்கள் மற்றும் விளம்பரப் படங்களைத் தயாரிக்கும் துறையில் முன்னோடிகளில் ஒருவராக செலசினே தொலைக்காட்சி நிறுவனம் திகழ்ந்தது.

செலசினே நிறுவனத்தின் அடித்தளமாகத்திகழும் தயாரிப்புப்பிரிவின் மூலம் புதிய தொழிநுட்பங்களுடன் இணைந்ததாக 2019 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களை பிரபலப்படுத்துவதில் அரசு நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

அவற்றில் மேற்கு மாகாண சாலை மேம்பாட்டுத் திட்டம், சுற்றுலா அபிவிருத்தி, வனவிலங்கு மற்றும் கிறிஸ்தவ மத விவகாரங்கள் அமைச்சகம், பல்கலைக்கழக மானிய ஆணையம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம், சமூர்த்தி மேம்பாட்டுத் துறை, இலங்கை மின்சார வாரியம் போன்ற நிறுவனங்களின் அறிக்கையிடல்களை போலவே விளம்பரம் மற்றும் அதனுடன் கூடிய செயற்பாடுகள் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கு முக்கியமானதொரு இடத்தை பெற்றுள்ளது.

பல புதிய முயற்சிகளுடன், தயாரிப்புப்பிரிவு மேலும் முன்னேற எதிர்பார்க்கிறது.

நிதிப்பிரிவு

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் அனைத்து நிதி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவது நிதிப் பிரிவின் மூலமேயாகும். 2019 ஆம் ஆண்டும் இப்பிரிவிற்கு சிறப்பான ஒரு வருட் என்றே கூறலாம். நிதிப்பிரிவின் அனைத்து செயற்பாடுகளையும் மேலும் செயற்திறன் மிக்கதாக மாற்ற புதிய முறைமைகள் அறிமுகம் செய்யப்பட்டது. அரசின் கணக்கியல் தரங்களுக்கு இணங்க அனைத்து நிதிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றது. செலுத்தப்பட வேண்டிய பல கடன்தொகைகள் வழங்குனர்களுக்கு சரியான நேரத்தில் செலுத்தப்பட்டது. பெறப்பட வேண்டிய தொகைகளுக்கான பல முறைமைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரதிபலனாக தணிக்கை ஒப்பந்தங்களை குறைப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. கடந்த ஆண்டுகளின் நிதி அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கக்கிடைத்தமையும் நாம் அடைந்த மற்றுமொரு வெற்றிகளில் ஒன்று.


ஆண்டறிக்கைகளை வடிவமைத்தல், தகவல் தொழில்நுட்ப அமைச்சு மற்றும் தணிக்கைக்கு விரைவாக வழங்குதல், அரச வியாபார திணைக்களம் போன்றவற்றிற்கு விரைவாக வழங்க படிமுறைகளை மேற்கொள்ளல். கணக்காய்வாளரின் கருத்து 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளை போன்றே 2019 ஆம் ஆண்டிலும் அரச கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க சத்திய மற்றும் சாதாரண நிலை காட்டப்பட்டுள்ளது என கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் நிதிப்பிரிவினால் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கு நன்மதிப்பு கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சி முகாமைத்துப்பிரிவு


செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் முக்கியமான மற்றுமொரு பிரிவாக நிகழ்ச்சிப் பிரிவைக் கூறலாம். அரச மற்றும் தனியார் பிரிவுகளின் பெரும் நிகழ்ச்சிகளை முகாமைத்துவம் செய்வதே இப்பிரிவின் முக்கிய செயற்பாடாகும். 2019 ஆம் ஆண்டு எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகளில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் தாமரை கோபுர திறப்பு விழா பிரமாண்டமாக ரூபா ஒன்பது மில்லியன் பெறுமதியாகும். அதேபோல் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஆறு இலட்சம் பயனாளிகளுக்கு சமுர்த்தி உதவி வழங்கும் நிகழ்வு 22 மாவட்டங்களில் ரூபா. 11 மில்லியன் நிதிப் பெறுமதியில் இடம்பெற்றது. மேலும் நிதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட கேளுங்கள் செயற்திட்டம் மூன்று கட்டங்களின் கீழ் அநுராதபுரம், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் ரூபா.5.9 மில்லியன் பெறுமதியில் இடம்பெற்றது. மேலும் மேல் மாகாண சுற்றுலா திணைக்களத்தின் அமேசன் ஸ்ரீலங்கா 2019 விருது வழங்கும் ரூபா.1.3 மில்லியன் பெறுமதியில் இடம்பெற்றது. அதேபோல் நிதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட என்டர்ப்ரைசஸ் ஸ்ரீலங்கா கண்காட்சியின் கண்காட்சி கூடங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா.3.9 மில்லியன் நிதிச்செலவில் நிர்மாணிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டைப் போலவே இவ்வாண்டும் சிறந்த அதிகரிப்பை நிகழ்ச்சி முகாமைத்துவப் பிரிவு காட்டுவதுடன் 2020 ஆம் ஆண்டில் புதிய தொழில்நுட்ப வசதிகளை அறிமுகப்படுத்தி தமது வருமானத்தை அதிகரிப்பதே நோக்கமாகும்.

நிதியறிக்கை 2019

வருமான வளர்ச்சி




கடந்த 05 வருடங்களினுள் வருமானம் மற்றும் செலவு



2015-2019 ஆம் வருடங்களுக்கிடையில் நிறுவனத்தின் இலாபப்போக்கு

5 ஆண்டு காலத்தில் வருமானம் மற்றும் நேரடி செலவுகளின் போக்கு



நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

1. பொதுவானவை

1.1 நிறுவனத் தகவல்கள்

செலாசினெ தொலைக்காட்சி நிறுவனமானது (இதன் பின்னர் செலாசினே என்று அழைக்கப்படும்) 2019.02.26 ஆம் திகதி இல 2112/13 எனும் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் விடயதானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் தன்மை

நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள் விளம்பரப்படுத்தல், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு மற்றும் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு என்பனவாகும்.

1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2019.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு 67 ஊழியர்கள் பணியாற்றியுள்ளார்கள்.

2. கணக்கியல் கொள்கை தொடர்பில் முக்கிய அம்சங்களின் சாராம்சம்

2.1 பொதுவான கொள்கைகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டதாகும். இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ள நிதிசார் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

2.2 நிலைத்தன்மை மற்றும் ஒப்பீடு

இவ் வருடத்தில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைள் முந்திய வருடங்களில் பின்பற்றப்பட்ட கணக்குக் கொள்கைகளுடன் இணக்கப்பாடானதாக உள்ளது.

2.3 கடன் செலவுகள

கடன் செலவுகள் அவை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் எந்தத் தொகையும் மூலதனமாக்கப்படாது செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது.

3. சொத்து மதிப்பிடுதலும், அவை மதிப்பிடும் அடிப்படையும்

3.1 ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் சாதனங்கள்

செலவு அல்லது அளவு மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

3.2 வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை

வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை மதிப்பிடப்பட்ட தீர்வைப் பெறுமதி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3 காசும், காசுக்கு சமமானவையும்

காசும், காசுக்கு சமமானைவும் என்பது கையிலுள்ள காசு மற்றும் கோரிக்கை வைப்புக்களையும், துரித கதியில் தெரிந்த பெறுமானத்தில்காசுக்கு மாற்றக்கூடியதாகவும், பெறுமான மாற்றத்தில் குறிப்பிடப்பட்ட தீங்கெதனையும் விளைவிக்காததும், கூடிய திரவத் தன்மையுடைய குறுகிய கால முதலீடுகளுமாகும்.

3.4 தேய்மானம்

தேய்மானமானது ஒவ்வொரு சொத்தினதும் அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலப் பகுதிக்குள்ளானவாறு நேர்கோட்டு முறையின் பிரகாரம் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. நிதிக் குத்தகையின் கீழுள்ள சொத்துக்கள், குத்தகைக் காலப் பகுதியின் குறுகிய காலத்திற்கும், சமமான சொந்தச் சொத்துக்களின் பயன்பாட்டு காலப் பகுதிக்கும் ஏற்ப தேய்மானம் செய்யப்பட்டுள்ளன. நிலையான சொத்துக்களுக்குரிய தேய்மான விகிதம் திருத்தப்பட்டுள்ளது.

சமகால மற்றும் ஒப்பீட்டளவு காலப் பகுதிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பாட்டு காலம் வருமாறு:

தளபாடங்களும் பொருத்துதலும் 10 வருடங்கள்
கணனி சாதனங்கள் 5 வருடங்கள்
அலுவலக சாதனங்கள் 10 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள் 5 வருடங்கள்
புகைப்படக் கருவி, படமெடுக்கும் சாதனங்கள் 10 வருடங்கள்
கணனி மென்பொருட்கள் 10 வருடங்கள்

4. பொறுப்புக்களும், ஒதுக்கீடுகளும்

4.1 ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தவேண்டியவை அல்லது கோரிக்கை அடிப்படையில் செலுத்தவேண்டிய கடப்பாடுகள் என்பன நடைமுறைப் பொறுப்புக்களென ஐந்தொகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குப் பின்னர் முடிவடையவுள்ள கடப்பாடுகள் நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

4.2 ஓய்வூதிய, நலன்புரி செலவுகள்

ஊழியர்கள் பிரதிலாபங்கள் - LKAS 19 (2006 இல் திருத்தப்பட்டது) ஊழியர் நலன்புரிக்கமைய சகல ஊழியர்களுக்கும் சேவையின் முதலாவது வருடத்திலிருந்து ஓய்வூதிய நலன்புரிகளுக்கான ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய தொடர்ச்சியாக 05 வருட சேவையினைப் பூர்த்திசெய்த பின்னரே ஊழியர் ஒருவருக்கான பொறுப்பு ஏற்புடையதாகிறது.

4.3 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

நியதிச் சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதி பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புகளுக்கு தகுதியுடையவர்களாவார்கள். இந் நிறுவனமானது ஊழியர்களின் மொத்த வேதனாதிகளின் 15% மற்றும் 3% க்கான தொகையினை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கிறது.

5 வருமானக் கூற்று

5.1 மொத்த விற்பனவு

செலசினெயின் மொத்த விற்பனையானது கலை வேலைப்பாடுகள், அச்சிடுதல், அட்டவணைப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நிகழ்வு முகாமைத்துவம், மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து பெறப்படுகின்றவையாகும்.

5.2 வருமானம் இனங்காணல்

செலசினெயின் மொத்த விற்பனையானது கலை வேலைப்பாடுகள், அட்டவணைப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நிகழ்வு முகாமைத்துவம், மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து பெறப்படுகின்றவையாகும்.

5.3 செலவு இனங்காணல்

வருமானக் கூற்றில் செலவுகளானது ஏற்பட்ட செலவுக்கும், வருமானத்தின் குறிப்பிட்ட விடயங்களுக்கான உழைப்பிற்கும் இடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

6. சம்பந்தப்பட்ட நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்

நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியில் எந்தவொரு சம்பந்தப்பட்ட நபர்களுடனும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் செய்யப்படவில்லை.

7. ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதியின் பின்னர் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்களையோ, வெளிப்படுத்தல்களையோ செய்யவேண்டிய அளவிலான நிகழ்வுகள் இடம்பெறவில்லை.

8. இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களின்படி பிரமுக வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூபா 300,000 இலங்கை வங்கி சேமிப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

9. அறவிடமுடியாத மற்றும் ஐயமான கடன்பட்டோருக்காக 2.5% மும், இனங்காணப்படாத கடன்பட்டோர் ஆண்டு 2006 க்காக முழுமையயாகவும் ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

10. 10.1 இரண்டு ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

10.2 இங்கு குறிப்பிடப்பட்ட கணக்காய்வு கோரிக்கைகளுக்கு நிறுவனத்தின் சொத்துக்கள் 2020 இல் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதிக் கணக்கில் பதிவு செய்யப்படும்.

வருமான அறிக்கை

2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த வருமான அறிக்கை இலங்கை ரூபாவின் படி

	குறிப்புகள்	2019 ரூபா.	2018 ரூபா.	2017 ரூபா.
வருமானம்	11	**634,368,092.16**	**597,861,538.10**	**637,351,163.32**
நேர் செலவுகள்	12	533,238,084.32	490,793,242.38	541,297,909.69
மொத்த இலாபம் / நட்டம்		**101,130,007.84**	**107,068,295.72**	**96,053,253.63**
ஏனைய வருமானம்	13	7,732,399.32	13,822,647.07	4,379,747.31
நிர்வாக மற்றும் ஸ்தாபனச் செலவுகள்	14	(76,773,888.13)	(67,378,237.30)	(71,096,270.58)
விற்பனை மற்றும் விநியோக செலவுகள்	15	(20,379,230.71)	(21,892,667.18)	(26,231,866.42)
நடைமுறையிலிருந்து இலாபம்		**11,709,288.32**	**31,620,038.31**	**3,104,863.94**
நிதிசார் மற்றும் ஏனைய செலவுகள்	16	(196,806.41)	(224,807.66)	(124,084.60)
ஏனைய செலவுகள்	17	(3,212,272.49)	(1,690,794.00)	(1,770,342.59)
வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம்/நட்டம்		**8,300,209.42**	**29,704,436.65**	**1,210,436.75**
வரிவிதிப்புக்கு பின்னரான தேறிய இலாபம்/நட்டம்		**8,300,209.42**	**29,704,436.65**	**1,210,436.75**
ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம்		-	-	-
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம் இலாபம் / நட்டம்		**8,300,209.42**	**29,704,436.65**	**1,210,436.75**

ஐந்தொகை

31 டிசம்பர் 2019 அன்று உள்ளவாறான

	குறிப்புகள்	2019 ரூபா.	2018 ரூபா.	2017 ரூபா.
சொத்துக்கள்				
நடைமுறை அல்லாதவை				
ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள்	18	8,819,372.19	9,703,764.59	11,170,153.95
தொட்டுணர முடியாத சொத்துக்கள்	18-A	2,908,740.69	3,559,605.76	3,460,377.76
கட்டட செலவுகள்		-	1,842,062.05	3,684,124.10
மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்		**11,728,112.88**	**15,105,432.40**	**18,314,655.81**
நடைமுறை				
முதலீடுகள்	19	32,398,200.00	20,898,200.00	898,200.00
வியாபாரம் கிடைக்கவேண்டியவை	20	393,767,769.15	465,547,234.05	390,651,319.86
ஏனைய கிடைக்கவேண்டியவை	21	1,669,896.08	1,395,510.60	1,662,656.660
கையிலும், வங்கியிலும் உள்ள காசு	22	27,686,494.15	13,380,385.01	31,416,455.80
நடைமுறை சொத்துக்கள		**455,522,358.38**	**501,221,329.66**	**424,628,632.32**
மொத்த சொத்துக்கள்		**467,250,472.26**	**516,326,762.06**	**442,943,288.13**
ஒப்புரவும், பொறுப்புக்களும்				
ஒப்புரவு				
நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்/நட்டம்		124,389,548.02	109,791,825.84	70,209,475.81
மொத்த ஒப்புரவு		**124,389,548.02**	**109,791,825.84**	**70,209,475.81**
பொறுப்புக்கள்				
நடைமுறை அல்லாதவை				
செலுத்தவேண்டிய பணிக்கொடை	23	16,381,707.17	11,919,393.60	9,692,481.86
வட்டியுடனான கடன்களும், கடன்படலும்	24	-	-	-
திறைசேரி கடன்		-	-	-
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்		**16,381,707.17**	**11,919,393.60**	**9,692,481.86**
நடைமுறை				
வட்டியுடனான கடன்களும், கடன்படலும்	24	-	-	
வியாபாரமும், செலுத்தவேண்டிய ஏனையவையும்	25	326,349,665.07	394,485,990.62	362,911,778.46
திறைசேரி கடன்		-	-	-
பெற்றுக்கொண்ட முற்பணம்		129,552.00	129,552.00	129,552.00
நடைமுறை பொறுப்புக்கள்		**326,479,217.07**	**394,615,542.62**	**363,041,330.46**
மொத்த ஒப்புரவும், பொறுப்புக்களும்		**467,250,472.26**	**516,326,762.06**	**442,943,288.13**

1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரமும், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமனங்களின் தேவையின் பிரகாரமும் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பொதுமுகாமையாளர்- செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

இந்த நிதி அறிக்கை அமைத்தல் மற்றும் முன்வைத்தலுக்கான பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சாரும் என்பதோடு அதற்காக பணிப்பாளர் சபையினால் கீழ் கையெலுத்திட்டப்பட்டுள்ளது.

தலைவர்

செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

காசுப் பாய்ச்சல் கூற்று

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

	2019 ரூபா.	2018 ரூபா.
நடைமுறை செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம்	8,300,209.42	29,704,436.65
சீராக்கல்		
குத்தகை வட்டி	-	-
வட்டி வருமானம்	(4,035,768.29)	(536,796.08)
தேய்மானம்	2,897,602.30	3,170,873.00
பணிக்கொடைக்கான ஏற்பாடு	4,766,131.08	2,797,621.74
வெளியேற்றப்பட்ட ஆதனம் மீதான இலாபம்/நட்டம்	(1,376,057.00)	-
முன்னைய ஆண்டுகளில் சீராக்கல்கள்	6,297,512.76	9,877,913.38
தொழிற்படுமுதல் மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்	**16,849,630.27**	**45,014,048.69**
வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவையில் (அதிகரிப்பு/குறைவு)	72,207,297.84	(73,122,256.14)
வைப்புக்கள் மற்றும் முற்செலுத்தப்பட்டவையில் (அதிகரிப்பு/குறைவு)	(274,385.48)	267,146.06
வியாபார கடன் மற்றும் பிற கொடுப்பனவுகளின் (அதிகரித்தல்/குறைவடைதல்)	(68,136,325.55)	31,574,212.16
முற்பணம் பெற்றுக்கொண்டதில் (அதிகரிப்பு/குறைவு)	-	-
கட்டட செலவுகளுக்கான ஏற்பாடு (அதிகரிப்பு/குறைவு)	-	-
செயற்பாட்டுக்கு (பயன்படுத்திய) பெறப்பட்ட காசு	**20,646,217.08**	**3,733,150.77**
செலுத்தப்பட்ட பணிக்கொடை	(303,817.51)	(570,710.00)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/பயன்படுத்திய தேறிய காசு	**20,342,399.57**	**3,162,440.77**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்		
ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் கொள்வனவு	1,427941.28	(1,735,307.64)
வட்டி வருமானம்	4,035,768.29	536,796.08
நிலையான வைப்புக்கள்	(11,500,000.00)	(20,000,000.00)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து (பயன்படுத்திய)/தேறிய காசு	**(6,036,290.43)**	**(21,198,511.56)**
திறைசேரி கடன் கிடைக்கப்பெற்றது/திருப்பி செலுத்தியது		
கடன்கள் திருப்பிச் செலுத்தியது	-	-
கடன்கள் திருப்பிச் செலுத்தியது	-	-
குத்தகையில் பிழை திருத்தம்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து / பயன்படுத்திய தேறிய காசு	-	-
காசிலும், காசுக்கு சமமானவற்றிலும் தேறிய குறைவு	**14,306,109.14**	**(18,036,070.79)**
வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவையும் (குறிப்பு அ)	13,380,385.01	31,416,455.80
வருட முடிவில் காசும், காசுக்கு சமமானவையும் (குறிப்பு அ)	**27,686,494.15**	**13,380,385.01**

காசுப் பாய்ச்சல் கூற்று

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

	2019 ரூபா.	2018 ரூபா.
குறிப்பு அ		
காசும், காசுக்கு சமமானவையும்		
இவ. - க.இல. - 2323299	3,078,297.75	7,540,695.27
இவ. - சேமிப்பு க.இல - 2329765	327,395.69	315,207.27
மக்கள் வங்கி 200100130005980	(3,652,842.49)	3,467,878.97
மக்கள் வங்கி 200100110005980	27,571,332.74	-
தயாரிப்பு முற்பணம்	141,808.50	1,881,603.50
ஏனைய முற்பணம்	220,501.96	175,000.00
	27,686,494.15	**13,380,385.01**

ஒப்புரவில் மாற்றங்கள் பற்றிய கூற்று

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

	2019 ரூபா.
	பேணிய இலாபம்
2019 ஜனவரி 01 அன்று மீதி	109,791,825.84
முன்னைய ஆண்டுகளில் சீராக்கல்கள் - குறிப்பு (28)	6,297,512.76
ஆண்டில் தேறிய இலாபம் / நட்டம்	8,300,209.42
2019 டிசம்பர் 31 ஆம் அன்று மீதி	**124,389,548.02**

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

	2019 ரூபா.	2018 ரூபா.	2017 ரூபா.
குறிப்பு - 11 - வருமானம்			
தயாரிப்பு	59,618,406.45	64,274,782.71	32,661,878.25
வரைவியல்	50,717,765.80	44,104,237.11	48,299,073.00
அட்டவணை தயாரித்தல்	375,524,279.55	435,925,412.29	405,675,446.93
நிகழ்வு முகாமைத்துவம்	148,333,815.36	52,042,205.99	150,487,265.14
நானாவிதமானவை	-	7,500.00	82,500.00
வலை வருமானம்	173,825.00	1,507,400.00	145,000.00
	634,368,092.16	**597,861,538.10**	**637,351,163.32**
குறிப்பு - 12 - நேரடி செலவுகள்			
தயாரிப்பு செலவுகள்	38,654,700.00	43,229,765.58	28,656,917.64
வரைவியல் செலவுகள்	36,176,902.33	40,018,353.15	33,511,635.16
அட்டவணை தயாரித்தல் செலவுகள்	316,005,865.04	358,077,255.35	347,405,543.49
நிகழ்வு முகாமைத்துவம் செலவுகள்	142,256,802.84	48,115,268.30	131,586,313.40
வலை செலவுகள்	143,814.11	1,352,600.00	137,500.00
நானாவிதமானவை	-	-	-
	533,238,084.32	**490,793,242.38**	**541,297,909.69**
குறிப்பு - 13 - ஏனைய வருமானங்கள்			
விசேட தரகு கிடைத்தல்	-	12,097,784.00	-
பணியாளர் கடன் வட்டி	135,682.65	136,066.99	116,790.59
வங்கி வட்டி	4,035,768.29	536,796.08	99,309.82
சொத்துக்கள் விற்பனை (இலாபம்/ நட்டம்)	821,491.38	-	-
ஏனைய வருமானம்	1,566,457.00	243,000.00	3,531,849.90
வழங்குதல் பதிவு	1,078,000.00	632,000.00	312,000.00
மொழிப்பெயர்ப்பு கட்டணங்கள்	10,000.00	75,000.00	-
கலை வேலை கட்டணங்கள்	85,000.00	65,000.00	281,000.00
போக்குவரத்து கட்டணங்கள்	-	37,000.00	38,797.00
	7,732,399.32	**13,822,647.07**	**4,379,747.31**

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

	2019 ரூபா.	2018 ரூபா.	2017 ரூபா.
குறிப்பு - 14 - நிர்வாக மற்றும் தாபன செலவுகள்			
கொடுப்பனவுகள்	17,000.00	16,400.00	-
படி - தலைவர்	1,102,083.34	1,447,555.64	1,547,928.00
படி - ஒப்பந்த சேவைகள்	156,009.98	673,180.88	945,924.66
படி - பயிற்சி பெறுபவர்கள்	131,250.00	120,250.00	176,250.00
படி - போக்குவரத்து	802,688.14	800,000.00	900,000.00
படி - எரிபொருள்	505,766.66	329,110.32	290,065.26
படி - மொபைல்கள்	179,333.32	150,548.39	156,000.00
கணக்காய்வு கட்டணம்	1,194,000.00	250,000.00	120,000.00
சபை கூட்ட கட்டணம்	29,974.00	13,604.00	-
மிகையூதியம்- பணிப்பாளர் சபை	105,000.00	142,500.00	45,000.00
மிகையூதியம்	1,816,822.10	1,293,348.00	662,125.00
கட்டட செலவுகள்	1,842,062.05	1,842,062.05	1,842,062.04
கட்டட வாடகை செலவுகள் - திரைப்படக் கூட்டுத்தாபனம்	3,780,000.00	3,780,000.00	3,780,000.00
கட்டட வாடகை செலவுகள் - ராஜகிரிய அலுவலகம்	-	-	733,335.84
